# மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தங்களில் பயண அட்டை மூலம் கட்டணம் செலுத்தும் முறை

## செப்.1–இல் அமலுக்கு வருகிறது

**சென்னை, ஆக. 26:** சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வாகன நிறுத்தங்களில் பயண அட்டை மூலம் மட்டுமே கட்டணம் செலுத்தும் புதிய முறை செப்டம்பர் 1–ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படவுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் பயணிகளின் தடையற்ற போக்குவரத்தை எளிதாக்குவதற்காக பயண அட்டை மூலம் வாகனம் நிறுத்தும் கட்டணங்களைச் செலுத்தும் ஏற்பாட்டை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் செய்திருந்தது. இது தற்போது சோதனை அடிப்படையில் மெட்ரோ ரயில் நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்தப் புதிய முறை அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் செப்டம்பர் 1–ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வருகிறது. முன்னதாக, இந்த முறை ஆகஸ்ட் 1–ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனால், இந்த புதிய முறைக்கு மாறுவதற்கு பயணிகள் கால அவகாசம் கேட்டிருந்தனர். அவர்களின் கோரிக்கையை ஏற்று, ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டது. தற்போது 25 நாள்கள் கடந்துவிட்ட நிலையில், புதிய முறையை நடைமுறைப்படுத்த இன்னும் 6 நாள்கள் மட்டும் இருக்கிறது.

இந்த புதிய முறைப்படி, சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள நிறுத்துமிடங்களில் வாகனம் நிறுத்துவதற்கான கட்டணத்தை மெட்ரோ ரயில் பயண அட்டை மூலம் மட்டுமே செலுத்த முடியும். மெட்ரோ ரயில் பயண அட்டை இல்லாத பயணிகள், பொதுமக்கள் ஆகியோர் மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகனத்தை நிறுத்த அங்கு உள்ள வாடிக்கையாளர் சேவை மையம் மூலமாகவோ அல்லது டிக்கெட் கவுன்ட்டர்கள் மூலமாகவோ, மெட்ரோ ரயில் பயண அட்டையை வாங்க வேண்டும். இதன் மூலம் மட்டுமே பார்க்கிங் கட்டணம் செலுத்த முடியும்.